சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 21.03.2025 SC.17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உதயகுமார் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அ.சா.6 | | | |

------------------------------------------------------------

முதல் விசாரணை

நான் கோசேந்திர ஓடையில் குடியிருந்து வருகிறேன். 04.05.2020ம் தேதியன்று நான் கம்பத்திலிருந்து என்னுடைய வீட்டுக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது RMTC டிப்போக்கு எதிர்புரம் உள்ள டீ கடையில் நானும் கதிரவனும் டீ குடித்துக்கொண்டிருந்தோம். வேறு நபர்களும் இருந்தார்கள். அப்போது போலிஸ் ஜீப் அங்கு வந்தது. அப்போது மாயாண்டி, பொன்னையா டீ கடை சந்தில் நின்று கொண்டிருந்தார்கள். போலிசார் அவர்களை பிடித்தார்கள். அவர்களை எங்கள் முன்பு விசாரித்தபோது தங்கராஜ் என்பவரை குத்தியதை ஒத்துக்கொண்டார்கள். மாயாண்டி என்பவர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை போலிசாரிடம் எடுத்துக்கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.4**. (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) அத்தாட்சியில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். அது **அ.சா.ஆ.5**. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் அத்தாட்சி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் போட்ட பின்னர் போலிசார் என்னை மீண்டும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஒரு வாரம் கழித்து விசாரித்தார்கள். போலிசார் எங்களை விசாரிக்கும்போது நானும் கதிரவனும் கம்பம் RMTC டிப்போ அருகில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தோம் என்பதை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். போலிசாரிடம் நான் ஏற்கனவே எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள் என்று சொல்லவில்லை. மாயாண்டி பொன்னையாவை போலிஸ் பிடித்து வைத்திருந்தார்கள் என்ற விபரத்தை காவல் ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மாயாண்டி என்பவர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து

போலிசாரிடம் ஒப்படைத்தார் என்பதை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன்.ஒப்புதல் வாக்குமூலம் கையால் தான் பேனாவைக்கொண்டு எழுதினார்கள். அது 3 பக்கம் இருந்தது. நான் கடைசி பக்கத்தில் மட்டும் தான் கையொப்பம் போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கொடுத்ததாக கடைசியில் தான் என் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சி ஒப்புதல் வாக்குமூலத்தையும் காவல் ஆய்வாளர் தான் எழுதினார். அதை எழுதி முடிக்க எவ்வளவு நேரம் ஆகியது என்றால் 45 நிமிடம் ஆகியது. கத்தியினுடைய நீள அகலம் என்ன என்பதை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்தில் நான் கையொப்பம் போட்ட அளவுகளை நான் பார்க்கவில்லை. எதிரிகள் மீது என்ன வழக்கு என்ன குற்றப்பிரிவு என்று எனக்கு தெரியாது. கத்தியால் குத்திய வழக்கு என்று தெரியும். மாயாண்டி யார் என்று எனக்கு தெரியாது. மாயாண்டி எனக்கு நெருங்கிய உறவினர் என்றும், வேண்டுமென்றே அதை மறைத்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் போட்ட ஆவணங்களில் மாயாண்டியும் பொன்னையாவும் கையொப்பம் போட்டார்கள். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன் இடத்தில் என் முன்பு மாயாண்டியிடமிருந்து கத்தி எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், நான் காயம்பட்ட தங்கராஜ்க்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கத்தியை கைப்பற்றிய தாக சொல்லக்கூடிய இடத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தையும் அத்தாட்சியையும் தயார் செய்தார்கள். நான் காவ்லநிலையத்தில் தான் கையொப்பம் போட்டேன் என்றும், நான் சொல்வதுபோல் என் முன்வு வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 21.03.2025 SC.17/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணன் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | அ.சா.7 | | | |

-----------------------------------------------------------

முதல் விசாரணை

நான் கம்பம் பாரதியார் நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 04.05.2020 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு நான் தங்கராஜ் என்பவர் வீட்டில் கொத்தனார் வேலை செய்து வந்தேன். கொரனா காலகட்டம் என்பதால் அதிகாலையில் வேலைக்கு சென்று விடுவோம். நாங்கள் வீட்டு வேலை பார்த்தபோது பக்கத்து இடத்துக்காரர்கள் அவர்கள் இடம் இருப்பதாக தங்கராஜிடம் பிரச்சனை செய்தார்கள். அப்போது தங்கராஜ் என்னிடம் நீங்கள் வேலையை தொடர்ந்து செய்யுங்கள். நான் அவர்களிடம் பேசி கொள்கிறேன் என சொன்னார். நாங்கள் சுமார் 2.00 மணியளவில் நானும் எனது உடன் பிறந்த சகோதரர் பாண்டி என்பவரும் கான்கிரிட் வேலையை முடித்து விட்டு வீட்டுக்கு கிளம்பு தயாராக இருந்தோம். இருசக்கர வாகனத்தை எடுத்து ஒரு சந்துக்குள் வர ஏற்பாடு செய்தகொண்டிருந்தபோது தங்கராஜை பக்கத்து வீட்டுக்காரர்கள் குத்திவிட்டார்கள். அப்போது தங்கராஜ் மகன் குமார் ரத்தக்காயத்தில் இருந்த அவரது தந்தையை அழைத்து கம்பம் அரசு மருத்துவமனைக்கு சென்றார். நாங்கள் வீட்டுக்கு சென்றுவிட்டோம். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் தங்கராஜை பார்க்கும்போது அவர் காயத்துடன் இருந்தார். அவரை அவரது மற்றொரு மகனும் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற விபரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் சம்மன் கொடுத்து போலிசார் அழைத்து வந்தபோது தான் வழக்கில் என்னை சாட்சியாக போட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். நான் சொல்வதுபோல் தங்கராஜ் வீட்டில் புதிதாக கான்கிரிட் போடவில்லை என்றும், நான்

சம்பவ இடத்திலேயே கிடையாது என்றால் சரியல்ல. தங்கராஜ் வீட்டிற்கும் நாங்கள் கான்கிரிட் போட்டதாக சொல்லப்பட்ட இடத்திற்கும் 60 மீட்டர் இருக்கும். கான்கிரிட் போட்ட இடத்தில் பக்கத்தில் வீடு கிடையாது. நான் அ.சா.1–க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.